# 18. கட்டுரை

## இலக்கிய வகைகளுள் கட்டுரை பெறும் இடம்

இக்கால இலக்கியங்களுள் கட்டுரை சிறப்பான இடத்தைப் பெறுகிறது. சிறந்த கட்டுரைகள் உள்ளம் கவரும் வகையில் நல்ல வடிவங்களோடு அமைகின்றன. எனவே இலக்கிய ஆய்வில் கட்டுரைகளும் இடம் பெறுவது இன்றியமையாதது ஆகும். ஆனால் அது பொருள், நோக்கம், நடை ஆகியவைகளை ஒட்டி வேறுபடுகிறது. எனவே அதன் அமைப்பை முறையாக ஆய்வது இயலாததாகிறது. இதனால் கட்டுரை தனிப்பட்டதும் நிலைத்த வடிவமும் உடைய இலக்கியக்கலை ஆகுமா என்ற ஐயம் எழுகின்றது.

## கட்டுரையின் விளக்கம்

கட்டுரையாவது "சிதறுண்ட சிந்தனை" என்பர் பேக்கன் (BACON).[1] அதாவது, தொடர்பற்ற முறையில் மனிதனின் கருத்துக்களை வெளிப்படுத்தும் வாயிலாகும் என்பது அவர் கருத்தாகும். "உள்ளத்தின் போக்குப்படி அமைவதே கட்டுரை. அதன்கண் முறையும் ஒழுங்கும் அமைந்திருக்காது" என்று பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜான்சன் என்பவர் கட்டுரைக்கு விளக்கம் தருகிறார்.[2] எலிசபெத் அரசியார் காலத்திலிருந்த பேக்கனின் விளக்கமும், பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜான்சனின் விளக்கமும் இக்காலத்தில் நன்கு உருவாக்கி அமைக்கப்படும் கட்டுரைகளுக்குப் பொருந்தா.

"ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றி மிதமான அளவில் அமைந்த எழுத்தோவியமே கட்டுரையாகும்; தொடக்கத்தில் முடிவு பெறாத கருத்துக் குறிப்புக்களை கட்டுரை குறித்தது; ஆனால் இப்போது அளவில் வரையறை உடையதும் விரிந்த நடையுடையதுமான கருத்தோவியத்தை அது குறிக்கிறது." இவ்வாறு ஆக்சுபோர்டு ஆங்கில அகராதி கட்டுரை என்பதற்குப் பொருள் கூறுகிறது.

இவ்விளக்கமே இக்காலக் கட்டுரைகளுக்குப் பொருந்துவது ஆகும். இதனினும் ஒரு சிறந்த கட்டுரை, அளவிலும், விரிவிலும் ஒரு வரையறை உடையது என்பது தெளிவாகிறது. ஒரு கட்டுரையில் ஒரு பொருளைப் பற்றிய கருத்துக்கள் அனைத்தையும் விரிவாகவும் விளக்கமாகவும் கூறவேண்டியதில்லை என்பதை மனத்திற் கொள்ளுதல் வேண்டும். எனவே ஒரு கட்டுரை எப்பொருளைப் பற்றியதாயினும் அது சுருக்கமாக இருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது.

## கிராபே கருத்து

"கட்டுரை பொதுமக்களிடையே மிகவும் செல்வாக்குடைய இலக்கிய வகையாகும்; ஏனென்றால் அதை எழுதும் ஆசிரியர்க்குத் திறமையும், கட்டுரைப் பொருளை மேன்மேலும் தொடர்ந்து துருவி ஆராய வேண்டும் என்ற எண்ணமும் தேவை இல்லை. படிப்பவர்களுக்குப் பொதுவாகக் கட்டுரையின் வகைகளும் அவற்றின் மேற்போக்கான பொருள்களும் இன்ப உணர்வைத் தருகின்றன" என்று கிராபே (Crabbe) உரைக்கிறார்.

இது கட்டுரைப் பற்றிய குறுகிய கருத்து என்று அட்சன் கருதுகிறார்.[4] கிராபேயின் கருத்துப்படி கட்டுரை, பொருளை மேற்போக்காகக் கூறுவதாகும். அதனால் அதை எழுதுவது எளிது என்று அவர் கருதுகிறார். ஆனால் உண்மையில் கட்டுரைப் படைப்பு மிகக் கடினமானவையும் இன்பம் நல்க வல்லனவுமான இலக்கிய வடிவங்களில் ஒன்று. ஏனென்றால் அது பல பொருள்களையும் சுருக்கிச் செறிவாகக் கூறும் ஆற்றலுடையது; சுருங்கிய வடிவில் நிறைபொருளை உணர்த்துகிறது. சுருக்கம் மேற்போக்கான பொருளையே தரும் என்பது ஏற்றற்குரியதன்று. சுருக்கமும் பொருளாழமும் இயைந்திருத்தல் ஒரு சிறந்த கட்டுரையின் பண்பாகும். சுருக்கமும் பொருளாழமும் அமையக் கட்டுரையைப் படைப்பதற்கு அதன் பொருளைக் கட்டுரையாளர் ஐயந்திரிபுற உணர்ந்திருத்தல் வேண்டும்.

## கட்டுரைக்குரிய பண்புகள்

எனவே, சுருக்கம் ஒரு சிறந்த கட்டுரையின் இன்றியமையாத இயல்பாகும். அது பொருளை மிக விரிவாகக் கூறுதல் கூடாது. கட்டுரையில் பொருளை மிகவும் விரிவுபடக் கூறின் அதன் கலை அழகு சிதைவுறும். அதன்கண் கூறப்படும் பொருளும் அதைக் கூறும்

முறையும் கட்டுரையின் வரையறைக்கு ஏற்றபடி அமைந்திருத்தல் வேண்டும். பொருளைத் தேர்ந்தெடுத்தலும் அதுபற்றிய கருத்துக்களைத் தக்க இடங்களில் வலியுறுத்தி உரைப்பதும் கட்டுரை எழுதுதற்குரிய அடிப்படையான விதிகளில் ஒன்றாகும். கட்டுரையின் பகுதிகள் யாவும் பொதுவாக பொருளின் (subject) வரையறைக்கு உட்பட்டனவாகவே இருத்தல் வேண்டும். அப்பகுதிகள் துண்டு துண்டாக இருப்பினும் கட்டுரை முழுமை எய்திய ஒன்று என்ற உணர்வினைத் தருவதாய் இருத்தல் வேண்டும்.

கட்டுரைக்குப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப் பெற்ற மற்றொரு விதியாவது அதனை அமைக்கும் முறையில் மிகுதியான உரிமை வேண்டும் என்பதும் தீவிரக் கட்டுப்பாடுகள் தேவையில்லை என்பதுமாகும். இதனின்றும் பாட்டு, நாடகம் போன்ற மற்ற இலக்கிய வகைகளுக்கு இன்றியமையாத கட்டுப்பாடான அமைப்புமுறை கட்டுரைக்கு அத்துணை தேவையில்லை என்பது தெளிவாகிறது. கட்டுரையை மற்ற இலக்கிய வகைகளோடு ஒப்பிடும்போது அதற்குக் கட்டுப்பாடான அமைப்புமுறை பெரும்பாலும் இல்லை என்றும் அது சுருக்கமாக இருத்தல் வேண்டும் என்றும் தெளிவாகின்றன.

## கட்டுரை தற்சார்புத் தன்மையுடையது

கட்டுரைக்குரிய கரு (Theme) எதுவாயினும் அது பற்றிய விளக்கத்திற்கு குறிப்பிட்ட வரையறை இல்லை. உண்மையான கட்டுரை, அடிப்படையில் தற்சார்பு (Subjectivism) உடையதாகும். கட்டுரை, தன்னுணர்ச்சிப் பாடலைப் போன்று ஆசிரியரின் தன்னுணர்வை வெளிப்படுத்துவதாகும். ஆனால் ஆய்வுக் கட்டுரை (Dissertation) இதற்கு மாறானதாகும். அது புறநிலைச் சார்புடையது (objectivism) ஆகும். சிறந்த கட்டுரையில் அமையும் விளக்கங்களிலிருந்து அக்கட்டுரை ஆசிரியரின் உள்ளமும் பண்பும் நேரடியாக நன்கு புலனாகும்.

## கட்டுரை ஆய்வில் கருத்தில் கொள்ள வேண்டிய உண்மைகள்

ஒரு கட்டுரையை ஆய்வு செய்யுங்கால், சில உண்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். முதற்கண், ஆசிரியரின் ஆளுமை (Personality) அவர்தம் நோக்கம், கட்டுரைப் பொருளைப் பற்றிய அவருடைய போக்கு, பொதுவாக வாழ்க்கையைப் பற்றிய அவர்தம் கருத்து ஆகியவைகளைச் சிந்தித்து உணர்தல் வேண்டும். இவ்வாறு

கட்டுரையில் ஆசிரியரின் பண்புகளை வேறுபடுத்தி உணர்வதோடு அவருடைய கருத்து கட்டுரையில் உருவாகி அமைந்துள்ள திறத்தையும் கவனித்தல் வேண்டும். கட்டுரையின் பொருள் விளக்கத்திற்கு எந்தெந்தக் கருத்துக்களை ஆசிரியர் தேர்ந்தெடுத்துள்ளார் என்பதையும், எங்ஙனம் தம் கருத்துக்களைக் கட்டுரையில் புகுத்தியுள்ளார் என்பதையும், எவ்வாறு அவற்றை விளக்கி வலியுறுத்தியுள்ளார் என்பதையும், அவற்றிற்கு எங்ஙனம் முடிவு கூறியுள்ளார் என்பதையும் நுணுகி அறிதல் வேண்டும். மேலும் தெளிவுபட அமைத்தல் (presentation), பொருள் விளக்கம் (exposition), சான்று காட்டி விளக்குதல் (illustration) ஆகியவை பற்றிய ஆசிரியரின் கலைத்திறனையும் ஆய்தல் வேண்டும். அதோடு கட்டுரையில் ஆசிரியர் கூறும் கருத்துக்களை மதிப்பிடுதல் வேண்டும். இறுதியாக அவர்தம் கட்டுரை நடையின்கண் தனிக் கவனம் செலுத்துதல் வேண்டும். ஏனென்றால் நடையில்தான் ஆசிரியரின் ஆளுமைக்கூறு நன்கு விளங்கும். நடையின் பண்புகள் பற்றியும் அது எங்ஙனம் ஆசிரியரின் ஆளுமையைக் குறிக்கும் என்பதைப் பற்றியும் பொதுவாக முன்பே (பக். 227-232) சற்று விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அங்கு விளக்கிய நடையைப் பற்றிய கருத்துக்கள் அனைத்தும் கட்டுரைக்குப் பொருந்துவனவாகும். இங்கு மேலும் கட்டுரை நடையைப் பற்றி ஒருசில கருத்துக்களைக் காண்போம்.

நடை என்ற சொல்லுக்குச் செலவு என்பது பொருள். கட்டுரை நடை என்றால் கட்டுரைச் செலவு என்பதாகும். ஓரிடத்திலிருந்து நடக்கிறவன் பிறிதோரிடத்தை அடைகிறான். அவன் நடப்பதற்குக் கால் கருவியாக அமைகிறது. அவன் நடை அழகாகவும் கம்பீரமாகவும் இருந்தால் அது நம் கவனத்தை ஈர்க்கிறது. அப்பெருமித நடையை நாம் எப்போதும் மறப்பதில்லை. ஆனால், அவன் நடை காண்பதற்கு விகாரமாக இருந்தால், அதை நாம் விரும்புவதில்லை; அருவருக்கிறோம். நொந்து மெலிந்த நடையையும் நொண்டி நடப்பதையும் யார் விரும்புவார்கள்? இதைப் போன்றது தான் கட்டுரை நடையும். கட்டுரை நடையின் நோக்கமாவது, ஒரு கருத்து ஒருவன் மனத்திலிருந்து மற்றொருவன் மனத்தைச் சேர்தலாகும். ஒருவன் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சேர்தற்குக் கால் உதவியாய் இருப்பதுபோல் ஒருவன் கருத்து மற்றொருவன் மனத்தை அடைதற்குச் சொல் கருவியாக உள்ளது. சொற்கள் எவ்வளவுக் கெவ்வளவு அழகாகவும் இனிமையாகவும், பொருளுக்கேற்றவாயும்

உள்ளனவோ அவ்வளவுக்கவ்வளவு படிப்போர் மனத்தில் அச்சொற்களின் பொருள்கள் நன்கு பதியும்; அவற்றை நினைக்குந்தோறும் அவர்கள் உள்ளத்தில் இன்பம் பெருகும். இதனைத்தான் திருவள்ளுவர், 'நவில்தொறும் நூல்நயம்' என்றார்.

இங்கு ஓர் உதாரணத்தை ஆராய்வோம்.

"இந்நாளிலும் நாட்டு மாந்தர் விருப்புடன் கண்டு களிப்பது ஆட்டுப்போர். ஆட்டுக்கடாக்களைப் போட்டிக்காகவே வளர்ப்பர் சிலர். அவற்றைப் 'பொருதகர்' என்பர் திருவள்ளுவர். போரிடும் ஆடுகள் ஒன்றை ஒன்று உருத்து நோக்கும்; எழுந்து தாக்கும்; பின்வாங்கும்; முன்னேறும்; குதித்துப் பாயும்; குதித்து முட்டும்; விலக்கினாலும் விடாது; வெம்போர் விளைக்கும்".

ஒரு நல்ல கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சிறு பகுதி இது. இது படிப்பதற்கு எவ்வளவு இனிமையாக இருக்கின்றது! இதனை நன்கு கவனித்தால் இடத்துக்கேற்ற சொற்கள் அழகாக அமைந்திருப்பதைக் காணலாம்.

மாந்தர் விருப்புடன் கண்டுகளிப்பது ஆட்டுப்போர் : இத்தொடரில் 'களிப்பது' என்ற சொல் இடத்திற்கேற்றதாய் அமைந்துள்ளது. இரண்டு ஆட்டுக்கடாக்கள் ஒன்றையொன்று மோதிப் போரிடுவதைக் காணும் மக்கள் மனம் உற்சாகம் அடையும். இந்த உற்சாகத்தைக் 'களிப்பு' என்று சொல்வதுதான் பொருத்த முடையது. இங்ஙனமே, 'பின்வாங்கும்', 'முன்னேறும்' முதலியவை பொருளுக்கேற்ற சொற்களாகும். 'பின்னேறும்' 'முன்வாங்கும்' என்று சொல்வது எவ்வளவு பொருத்தமற்றது பாருங்கள். இன்னும், "போரிடும் ஆடுகள் ஒன்றையொன்று உருத்து நோக்கும்; எழுந்து தாக்கும்; பின்வாங்கும்; முன்னேறும்; குதித்துப் பாயும்; குதித்து முட்டும்" இங்கு நடையின் ஓசையைக் கவனியுங்கள். இரண்டு ஆட்டுக்கடாக்கள் ஒன்றையொன்று மோதிப் போரிடுவது போலவே இருக்கின்றதன்றோ இவ்வோசை? இதனால்தான் இப்பகுதி பொருள் சிறந்து, இன்னோசை மிகுந்து செம்மையான நடையுடையதாய்ச் சிறந்து விளங்குகிறது.

கீழ்வரும் அடிகளை நோக்குங்கள் : "இனி மலையை விடுத்துக் கடலில் பாய்வோம்; கடற்கரை நண்ணுவோம்; அலை பாடுகிறது; அப்பாட்டமுதைப் பருகப் பருக நெஞ்சம் கடலிற் படிகிறது; தன்னை அறியாமலே வானிலும் புகுகிறது."

இதன் பொருளாவது, கட்டுரை ஆசிரியர் கடற்கரையில் நின்று அலையின் அழகில் ஈடுபடுகிறார், அடுத்து வானத்தை நோக்குகிறார் என்பதுவே. இதை அலை இன்னிசை பாடுவதாகவும் அந்த இசை அவருக்கு அமிழ்தம்போல இனிப்பதாகவும், பின்பு அவரை அறியாமலே அவர் நெஞ்சம் வானத்தில் புகுவதாகவும் நயம்பட அக்கட்டுரை ஆசிரியர் உரைக்கிறார். இத்தகைய நடை இலக்கியக் கட்டுரைக்கு மிகவும் பொருந்துவதாகும். ஆனால் வரலாறு, விஞ்ஞானக் கட்டுரைகளில் கருத்துக்களை நேர்முகமான சொற்களால் உரைக்கவேண்டும். புனைந்துரைப்பது அங்குக் கூடாது.

## இக்காலக் கட்டுரைகள்

இக்கால இலக்கியக் கட்டுரைகள் பெரும்பாலும் பொருளை விரிவாகக் கூறும் போக்குடையவையாயும் அமைப்பு முறையில் வரையறை கொண்டனவாயும் உள்ளன. இது விருப்பம்போல் கட்டுரை எழுதும் உரிமை இன்மையைக் குறிக்கிறது. அதோடு கட்டுரை ஆசிரியரின் தனித்தன்மை அழகினை இழந்து விடுகிறது. எனினும் இலக்கிய வகைகள் காலமாறுதல்களுக்கேற்ப அமைய வேண்டுவனவாகும். அவைகளின் வளர்ச்சி அடிப்படையில் வாழ்க்கைத் தொடர்ச்சியின் அடையாளமாகும்.

## அடிக்குறிப்புகள்

1. Quoted by B.R. Mullik, Literary Criticism, Its principles and History 1969 P. 165
2. Quoted by W.H. Hudson, *An Introduction to the Study of Literature*, 1957 P. 331
3. Ibid P. 333
4. Ibid.